நாள். 14.07.2025

# புரிந்துணர்வு ஒப்பந்தம்

புதுக்கோட்டை ஜெ.ஜெ. கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), தமிழ்த்துறையின் கலை அருவி இலக்கியப்பேரவையும், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றமும் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டது. இந்நிகழ்வில் தமிழ்த்துறை தலைவர் முனைவர் கு.தயாநிதி, தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம் மாவட்டத் தலைவர், எழுத்தாளர் அண்டனூர் சுரா முன்னிலையில் கல்லூரியின் முதல்வர் முனைவர் ஐ.பரசுராமன், கலை இலக்கிய பெருமன்ற மாநிலப் பொதுச்செயலாளர் மருத்துவர் க.அறம் புாந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இது மாணவர்களின் படைப்பாற்றலை ஊக்குவிக்கும் வகையில் அமைந்தது. அதன் தொடக்கமாக 14, 15 ஜூலை 2025 திங்கள், செவ்வாய் ஆகிய இரண்டு நாள் சிறுகதை பயிலரங்கம் கல்லூரியின் கருத்தரங்கு கூடத்தில் நடைபெற்றது.

இரண்டாம் நாளின் மூன்றாம் அமர்வில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் மாநிலத்தலைவர் எழுத்தாளர் அண்டனூர் சுரா 'சிறுகதை பின்னனி - இடமும் காலமும்' என்னும் தலைப்பில் பேசினார். அவர் தம் உரையில் சிறுகதை உருவாகுவதற்கு சிறந்த கதைக்கரு அவசியமாகும். பாத்திர அமைப்பு, கதையின் போக்கிற்கு ஏற்ப சூழல் பின்னணி, வாழ்வியல் இடம் போன்றவற்றை அமைத்துக் கொள்ளவேண்டும். சிறுகதையை முதன்முதலில் படைக்கும் படைப்பாளன் ஏதேனும் ஒரு பாதிப்பை ஏற்படுத்தும் கதைத்சூழலை எடுத்துக்கூறி படிப்போரை ஈர்க்கும் பெரும் நோக்கோடு சிறுகதைப் படைக்கப்படுவேண்டும் என்பதை எடுத்துக் கூறினார்.

நான்காம் அமர்வில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற மாநில செயற்குழு உறுப்பினா் முனைவர் அகிலா கிருஷ்ணமூர்த்தி 'பெண் படைப்பாளுமை, பெண் சித்தரிப்பு' என்னும் தலைப்பில் பேசினார். சிறுகதையின் வழி சமூகப் பிரச்சனைகளையும் குடும்பப் பிரச்சனைகளையும் பெண்படைப்பாளர்கள் எழுதி வந்ததுள்ளனர். ஆனால், தம் வாழ்வில் நடக்கும் நிகழ்வுகளைளப் பெண்படைப்பாளர்கள் சிறுகதைகளாக எழுத முடிவதில்லை இருப்பினும் துணிச்சலாகத்தான் பெண் படைப்பாளர்கள் தனது படைப்பை உருவாக்க வேண்டும். நீங்கள் பார்த்த நிகழ்வை எழுதுவது கதையாகாது பாதிக்கப்பட்ட மக்கள் நின்று சிறுகதை படைக்கப்படவேண்டும்., குறிப்பாகப் பெண்களைப் பற்றி எழுத வேண்டும். சிறுகதை உருவாக்கத்தின் மூலம் உடன்கட்டை ஏறுதல், மறுமணம் செயதல் போன்ற மாறுதல்கள் சமூகத்தில் ஏற்பட்டுள்ளன என இதன் மூலம் பெண் படைப்பாளர்களின் படைப்புகள் சிறுகதைச் சமூகத்திற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்து வருகிறது எனப் பேசினார்.

ஐந்தாம் அமர்வில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் செயற்குழு உறுப்பினர் கவிஞர் கோ.கலியமூர்த்தி 'சிறுகதையில் அழகியலும், இனைவரையலும்' என்னும் தலைப்பில் சிறுகதையில் கதாப்பாத்திரம், பின்னனி, காலச்சூழல் போன்றவற்றைக் கதையாகக்கூறி அழகியச் செய்திகளையும் மேலும் இனவரைவியல் என்பது இனக்குழு சாதி, பண்பாடு, பழக்கவழக்கம், திருவிழா, சடங்குமுறை இவற்றைக் கதைவழி எடுத்துக் கூறினார்.

நிறைவு விழாவில் கல்லூரியின் முதல்வர் முனைவர் ஐ.பரசுராமன் சிறுகதை பயிலரங்கில் கலந்துகொண்ட மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கினார். தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் மாநிலப் பொதுச்செயலாளர் மருத்துவர் அறம் நிறைவுரை வழங்கினார். நிறைவாக கவிஞர் பாலசந்திரன் நன்றி கூறினார். நிகழ்ச்சியினை தமிழ்த்துறைத் தலைவர் மற்றும் உதவிப் பேராசிரியர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.